

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஏப்ரல் 14, 2022 | புரட்சி 21 | முழக்கம் 13 | விலை: ரூ.3.00

## கொளத்தூர் மணி – விடுதலை இராசேந்திரன் விளக்கம்

# அனைத்துப் பிரிவு மக்களையும் சமப்படுத்துவதே ‘திராவிட மாடல்’

***‘சன்’ தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘திராவிட மாடல்’ குறித்து விளக்கினார்.***

தமிழ்நாடு முதல்வர் தன்னுடைய ஆட்சியைப் பற்றி குறிப்பிடுகிற போதெல்லாம் அடிக்கடி “திராவிட மாடல்” என்ற சொல்லை பயன்படுத்துகிறார். அது குறித்த பல்வேறு, கேள்விகளும், விமர்சனங்களும் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன. அது எங்கிருந்து தொடங்க வேண்டும் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

இந்த நாட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட, வாய்ப்பு பெறாத மக்கள் கூட்டத்திற்கு அரசின் அனைத்தையும் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்கிற முடிவு, ஆங்கிலேயர் ஆட்சியில் எடுக்கப்பட்டது. அதற்காக அமைக்கப்பட்டது தான் ’சைமன் கமிசன்’. அப்போது, தமிழ்நாட்டு அரசியலில், அதாவது சென்னை மாகாண அரசியலில், பார்ப்பனரல்லாதார் இயக்கம் (நீதிக் கட்சி) தொடங்கப்பட்டது. அதை தொடங்கியவர்கள், பெரும் பணக்காரர்களும், மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுமாய் இருந்தாலும், இயக்கத்தின் நோக்கமாய் அவர்கள் கூறியது, “அனைத்து மக்களுக்குமான சேவைகளை கொண்டு போய் சேர்ப்பது தான்”. இன்னும் சொல்லப் போனால், ‘Fusion Of All castes’ அனைத்து ஜாதிகளையும் ஒன்றாக்க வேண்டும் என்றுகூட அந்த அமைப்பு நோக்கமாகக் கொண்டிருந்தது.

முதலில், அரசு வேலைகள் மற்றும் கல்வி நிலையங்களில் தங்களுக்கான வாய்ப்புகளைத் தான் கொள்கையாக கொண்டிருந்தார்கள். அதில் வெற்றியும் அடைந்தார்கள். அப்போது யார் கவனத்திற்கும் வராமல் இருந்த கோவில் சொத்துக்களை, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்கிற நீதிக் கட்சி தான் கவனத்தில் கொண்டது. இதற்கான சட்டங்களை அவர்கள் ஆட்சிக்கு வந்த சில ஆண்டுகளிலேயே நிறைவேற்றினார்கள். பெண்களுக்கான உரிமை, தாழ்த்தப்பட்ட மக்களின் பங்களிப்பு, பார்ப்பனரல்லாத மக்களை பிற்படுத்தப்பட்டோர் என்று பிரித்து அமைத்தல். அவர்களுக்கான மருத்துவக் கல்வி இடங்களை பிரித்துக் கொடுத்தல். அதில், சென்னை மாகாணத்தை நான்காக பிரித்து ஒவ்வொரு பகுதியிலிருந்தும் சமமான எண்ணிக்கை கொண்ட மருத்துவர்கள் வர வேண்டும் என்று எண்ணினார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான், பெரியாருடைய சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகத்தையும் பார்க்கலாம். திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றும் போது கூட பெரியார் கூறினார், “இதற்கு திராவிடர் கழகம் என்று பெயர் வைக்காமலிருந்தால் சூத்திரர் கழகம் என்றுதான் அழைத்திருக்க முடிந்திருக்கும்” என்றார். அப்படி, சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டிருந்த சூத்திர, பஞ்சம மக்களுக்கு மற்ற சமுதாயத்தினரைப் போன்ற சமநிலையை எய்துவதற்கு அந்த இயக்கம் (பார்ப்பனரல்லாதார் இயக்கம்) நீதிக்கட்சி தொடங்கி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இயக்கங்கள் செய்தே வந்திருக்கின்றன. அதை ஒவ்வொரு துறையிலும் செய்தே வந்திருக்கின்றனர்.

பெண்களை அதிகாரப்படுத்துதல், அதிலும் முக்கியமான ஒன்று, 1925களில் நீதிக்கட்சி ஆணையில் மருத்துவ படிப்புகளில் 25% பெண்களுக்கு கொடுக்க வேண்டும் என்று வைத்திருந்தார்கள். அப்போதுருந்த கல்வி கற்ற பெண்களை கணக்கில் கொண்டு வைத்திருந்திருக்கலாம். இப்போது 50% ஆக உயர்ந்திருக்கிறது. 33% நாடாளுமன்றத்தில் கொண்டு வர வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் அப்போதிருந்தே இந்த செய்திகள் பேசப்பட்டு வந்திருக்கின்றன. இப்படி அரசின் திட்டங்கள் போய்ச் சேராத மக்கள் கூட்டத்திற்கு அதைக் கொண்டு போய் சேர்க்க வேண்டும், அவர்களை உயர்த்த வேண்டும், குடும்பத்தில் அதிலும் அடிமையாக இருக்கக் கூடிய பெண்களை உயர்த்த வேண்டும் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயலாக்குகிற திட்டம்தான் “திராவிட மாடல்” என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், இந்த நாட்டில் மொழி மீது ஆதிக்கம் செலுத்தப்பட்டது. தமிழ் மொழி மீது வட மொழி ஆதிக்கம் செலுத்தப்பட்டது. தமிழை விட தகுதி குறைந்த அல்லது வரலாறு இல்லாத சமஸ்கிருதம் உயர்த்திப் பேசப்பட்டது. அதிலிருந்து சமஸ்கிருதத்தையும், தமிழையும் பிரித்து அமைத்ததும்கூட திராவிடர் இயக்கம்தான். மொழியிலும் ஒரு மாற்றத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். மற்றொன்று, தமிழ்நாட்டில் தொழிற்சாலை வசதிகள் என்பது சமமாக வளர்ந்துள்ளது. ஒரு பக்கம் மட்டும் தொழிற்சாலைகள் வளர்ந்து மற்றொரு பக்கம் தொழிற்ச்சாலைகள் இல்லாமல் கிராமங்களாக எங்கும் இல்லை. தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளும் இணைந்து வளர வேண்டும் என்று பல திட்டங்கள் திராவிடர் இயக்கத்தால் கொண்டு வரப்பட்டுள்ளன. இதையெல்லாம் ஒட்டு மொத்தமாக குறிப்பிடுகின்ற சொல்லாகத்தான் “திராவிட மாடல்” என்ற சொல்லை நாம் பார்க்க வேண்டும்.

அனைத்து தரப்பினருக்கும், அனைத்தும் போய் சேர வேண்டும். அனைத்து பகுதிகளும் ஒரே சமயத்தில் வளர வேண்டும். பெண்களை அதிகாரப்படுத்த வேண்டும் என்பவற்றையெல்லாம் சேர்த்துத்தான் தமிழ்நாடு முதல்வர் ‘திராவிட மாடல்’ என்று குறிப்பிடுகிறார்.

இவைகள் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கையும் ஆகும். மாநில உரிமைகள் என்று பார்க்கிற போது, பெரியார் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று குரல் கொடுத்தார், அடுத்து அண்ணா, தென் இந்தியாவின் நான்கு மாநிலங்களை இணைத்து, பிரிந்து செல்லக்கூடிய சம உரிமை உடைய ‘திராவிட சமதர்மக் கூட்டரசாக’ இருக்க வேண்டும் என்று அறிவித்தார். அரசியலமைப்பு சட்டத்திற்கு அது ஒத்துப்போகாத காரணத்தால், சட்டப்படி அதை தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டதால் “மாநில சுயாட்சி” என்பதாக குறைத்துக் கொண்டு அரசியல் பணிகளை திமுக செய்யத் துவங்கியது. அதே தான் இப்போதும் ஒவ்வொன்றிலும் மாநில உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை தற்போதைய முதல்வர் செய்து கொண்டிருக்கிறார். இவை அனைத்தையும் இணைத்த சொல்லாகத்தான் “திராவிட மாடல்” என்ற சொல்லாக நான் கருதுகினேன்.

**பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ‘சன்’ தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி:**

“திராவிட மாடல்” என்ற சொல் தற்போது தமிழ்நாட்டில் மிக முக்கியமாக பேசப்படுகின்ற ஒரு சொல்லாக மாறி இருக்கிறது. குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் “திராவிட மாடல்” என்ற கோட்பாட்டை முன்னிறுத்தி தொடர்ச்சியாக பேசி, செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அண்மைக் காலமாக “திராவிட மாடல்” என்ற சொல் பேசு பொருளாக மாறிய பிறகு இது குறித்து பல கேள்விகளும் எழுப்பப்படுகின்றன. “திராவிட மாடல்” என்பதற்கு ஏதேனும் கோட்பாடுகள், வரை யரைகள் இருக்கின்றனவா? திராவிட இயக்கங்கள் மக்களுக்குச் செய்த சமூக சீர்திருத்தங்கள் அல்லது சமூக மாற்றத்தை முன்னிறுத்தி அதையே ஒரு கோட்பாடு என்று கூற முடியுமா ? என்ற கேள்வி சில முகாம்களிலிருந்து எழுப்பப்படுவதை நாம் பார்க்கின்றோம்.

“திராவிட மாடல்” என்பதற்கான கோட்பாட்டு உருவாக்கம், அதற்கான நடைமுறை செயல்பாடுகள், இவைகளெல்லாம் தத்துவ ரீதியாக நூல்களில் எழுதப்பட்டவை அல்ல. இவைகள் நடைமுறைகளிலிருந்து, சமூக எதார்த்தத்தில் இருந்து உருவாக்கப்பட்டவை. இந்தியா என்ற பல பல்வேறு மொழி, பண்பாடு கொண்ட இனங்கள் கொண்ட ஒரு துணைக் கண்டத்தில், அனைத்து இன மக்களும் சமத்துவமாக வாழ வேண்டும். அந்த மக்களிடையே சமத்துவம் பரவலாக்கப்பட வேண்டும். பரவலாக்குகின்ற போது, யார் உண்மையாக பாதிக்கப்பட்ட மக்களாக இருக்கிறார்களோ, அவர்களை நோக்கிய, அவர்களை அதிகாரமளிக்கக்கூடிய, அவர்களை மேம்படுத்தக் கூடிய திட்டங்களை உருவாக்க வேண்டும். இந்த அடிப்படையில் தான் “திராவிடர் இயக்கம்” என்பதே 1916இல் உருவாக்கப்பட்டு கல்வி, வேலைவாய்ப்பில் முன்னுரிமை, “வகுப்புவாரி பிரதிநிதித்துவம்” என்ற கோட்பாட்டை அறிமுகப்படுத்தியது.

அதைத் தொடர்ந்து, பண்பாட்டுத் தளங்களிலும் திராவிடர்கள், அடிமைப்படுத்தப்படுகிற புள்ளிகளை கண்டறிந்து அவைகளை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கான பல சமுதாய மாற்றச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அதற்குப் பிறகு தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் நடந்து வந்த காமராசர் - தி.மு.க. ஆட்சிகளில், ஒரு உண்மை கண்டறியப்பட்டது. இந்தியா போன்ற பல்வேறு தேசிய இன மக்கள் வாழ்கிற இடத்தில், ஒவ்வொரு இனமும் சமத்துவமாக வாழ்கிறதா ? என்ற கேள்விக்கு இல்லை என்பது பதிலாகிவிட்டது. காரணம் ஜாதியால் அவர்கள் பிரித்து இருக்கின்றனர். வாழ்கின்ற பகுதியால் பிளவுபட்டு நிற்கிறார்கள். ஆக, ஜாதிப் பிளவு, சமூகப் பிளவு இவைகளை சரி செய்வதற்கு நாம் என்ன செய்யலாம்? என்கிறபோது, அவர்களை கல்வியில் அதிகார மளித்தல், வேலை வாய்ப்பில் அதிகாரமளித்தல் என்ற வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துடன் தான் அது துவங்கியது. அதற்குப் பிறகு அது படிப்படியாக செழுமைப் பெற்று வளர்ச்சியடைந்து அது சமூகத் தில் பெரும் தாக்கத்தை உருவாக்கியது. தொடர்ந்து சமூக சமத்துவ திட்டங்களும் வந்தன. சமூக நலத் திட்டம் என்பது, விளிம்பு நிலை மக்களுக்கு அடிப்படை தேவைகளுக்கான வாழ்வுரிமையை மீட்டெடுத்துத் தருதல். அதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. அவை களெல்லாம் இலவச திட்டங்கள்; மக்களை இலவசமாக்குகிறார்கள், என்று குற்றம் சாட்டினார்கள். உண்மையில் அவைகள் மக்களை இலவசமாக்கவில்லை. மக்களை சுயமரியாதைக்காரர்களாக, மக்களை அடுத்தவர்களிடம் கையேந்தி நிற்காதவர்களாக மாற்றியது.

அதற்குப் பிறகு தொழில் வளர்ச்சி வந்தது, பெண்ணுரிமை, சட்டங்கள் வந்தன. கோட்பாடுகளாக பரிணாமம் பெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் இன்றைக்கு “திராவிட மாடல்” என்பது இட ஒதுக்கீடு மட்டுமல்ல, இட ஒதுக்கீடு, மாநிலங்களின் தன்னாட்சி, பெண்களுக்கான உரிமை, இட ஒதுக்கீட்டிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கக்கூடிய உள் ஒதுக்கீடுகள், பிற மொழி ஆதிக்க எதிர்ப்பு, தமிழர்களை அடிமைப் பண்பாட்டில் இருந்து விடுவித்து அவர்களை சமத்துவப் பண்பாட்டை நோக்கி நகர்த்துதல் அனைத்தும் உள்ளடங்கியிருக்கின்றன. இவை யெல்லாவற்றையும் விட மாறி வரும் உலகமயமாக்கல் சூழலில் தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டை ஒரு வளமான மாநிலமாக பொருளாதார ரீதியாக வளர்த்தெடுப்பது என்ற முக்கிய கோட்பாடும் இருக்கிறது. இவைகளை உள்ளடக்கித் தான் “திராவிட மாடல்” என்ற கோட்பாட்டை முதலமைச்சர் முன்னிறுத்தி இருக்கிறார், என்றார் விடுதலை இராசேந்திரன்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 14.04.2022**

### பெரியார் – அம்பேத்கர் – திராவிட மாடலில் தத்துவ நாயகர்களாக தமிழக அரசு ஏற்றுள்ளது

## அம்பேத்கர் பிறந்தநாள் சமத்துவ நாள்

* அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும். தமிழ்நாடு முழுவதும் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்படும்.
* திமுக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா கோரிக்கையை ஏற்று, அண்ணல் அம்பேத்கரின் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து தமிழக அரசால் செம்பதிப்பாக வெளியிடப்படும்
* விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் கோரிக்கையை ஏற்று, அம்பேத்கர் மணிமண்டபத்தில், அம்பேத்கரின் வெண்கல முழு உருவச்சிலை நிறுவப்படும்.

போன்ற அறிவிப்புகளை, 110 விதியின் கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 13.04.2022 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்.

தலையங்கம்

## அமித்ஷாவின் ‘அடாவடி’

மத்திய மாநில பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் சேர, இனி நுழைவுத் தேர்வை எழுத வேண்டும் என்ற முடிவை ஒன்றிய ஆட்சி எடுத்திருக்கிறது. இதற்குப் பெயர் CUTE என்பதாகும். இது விளிம்பு நிலை மக்களுக்கு எதிரானது, கோச்சிங் சென்டருக்குத் தான் வழி வகுக்கும். இது இரத்து செய்யப்பட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் 09.04.2022 அன்று ஒரு தனிநபர் மசோதாவை கொண்டு வந்துள்ளார். பாஜக என்ற கட்சியைத் தவிர, அதிமுக உட்பட அனைத்துக் கட்சிகளும் ஆதரித்து பேசியிருப்பது, தமிழ்நாட்டின் தனித்துவத்தைக் காட்டியிருக்கிறது. உண்மை யிலேயே இது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

பாஜகவினுடைய இந்த இந்தி ஆதரவு, நீட் ஆதரவு நடவடிக்கைகளை தமிழ் மண் ஒருபோதும் ஏற்காது அவர்கள் சட்டமன்றத்தில் நடந்ததைப்போல தனிமைப்பட்டு நிற்கப் போகிறார்கள். உள்துறை அமைச்சர் அமித்ஷா ஒரு நெருப்பை கொளுத்திப் போட்டு இருக்கிறார். “இந்தியை அலுவல் மொழியாக மாற்ற வேண்டும். ஆங்கிலத்தை அலுவல் மொழி நிலையிலிருந்து படிப்படியாக ஒழிக்க வேண்டும்” என்று அவர் கூறியிருப்பது கடும் விவாதங்களை எழுப்பியிருக்கிறது. இந்திய அரசியலமைப்பின் அலுவல் மொழி தொடர்பான 17ஆவது பகுதி இயற்றப்பட்ட காலத்திலிருந்தே இந்த விவாதங்கள் துவங்கி விட்டன. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே அன்றைய சென்னை மாகாணத்தில் இந்தியைப் பாட மொழிகளாக்கும் முயற்சிகள் தோல்வியில் தான் முடிந்தது என்பது வரலாறு. பிறகு, நேரு தென்னாட்டு மக்களுக்கு ஒரு உறுதிமொழியை கொடுத்தார். ‘இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரை இந்தி திணிக்கப்பட மாட்டாது. ஆங்கிலமே நீடிக்கும்’ என்று கூறினார்.

இப்போது இந்தி மொழியை ஒன்றிய ஆட்சி மீண்டும் கையில் எடுத்துக் கொண்டு இருக்கிறது. அலுவல் மொழியாக மட்டுமல்ல, தொடர்பு மொழியாகவும் இந்தி இருக்க வேண்டும் என்று சொல்லுகிற நிலைக்கு அது வந்துவிட்டது. கொரோணா காலத்தில் கூட இந்தியை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று பல சுற்றறிக்கைகளை ஒன்றிய ஆட்சி அனுப்பிக் கொண்டிருந்தது. ஆனால், கொரோனா நோய் தீர்ப்பதில் மாநிலங்கள் அதிகம் கவனம் செலுத்தியதால், இந்தப் பிரச்சனை கவனத்திற்கு வராமலே போய்விட்டது.

ஆங்கிலம் வசதியாக இருக்கிறது; தேவையாக இருக்கிறது என்று ஒருவர் முடிவு செய்வதால் அதில் தலையிட அரசுக்கு உரிமையில்லை. ஆங்கிலம் அன்னிய மொழி என்று அமித்ஷா கூறுவதிலும் அர்த்தமில்லை. தமிழ், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளுக்கு சமமாக இந்தியாவில் ஆங்கிலம் பயன்பாட்டில் இருக்கிறது என்பது உண்மை. சொல்லப் போனால் ‘சாகித்ய அகாதமி’ என்ற மத்திய பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் அமைப்பு ஆங்கிலத்தையும் இந்திய தேசிய மொழிகளில் ஒன்றாக அங்கீகரித்துள்ளதோடு சிறந்த ஆங்கில நூல்களுக்கு விருது களையும் வழங்கி வருகிறது. உள்துறை அமைச்சராக இருக்கும் ஒருவர், இந்தக் குறைந்த புரிதல்கூட இல்லாமல் பேசுவதற்குக் காரணம் ‘இந்துத்துவா’ என்ற மதவெறிப் பார்வை தான். பிறப்பால் ஒரு குஜராத்தியாக அவர் இருந்தும் இந்தியைத் தூக்கிப் பிடிப்பது சமஸ்கிருதம் என்ற பார்ப்பனியப் பண்பாட்டுக்கு மிக நெருக்கமாக இருப்பது இந்தி என்பதால் தான். சமஸ்கிருதமே இந்த நாட்டின் தேசிய மொழியாக வேண்டும் என்றும் அந்தக் காலம் வரும்வரை, இந்தி தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்பதே ஆர்.எஸ்.எஸ். கொள்கை. ஆர்.எஸ்.எஸ். தத்துவத்தை உருவாக்கிய கோல்வாக்கர் இதை எழுத்துப்பூர்வமாகவே பதிவு செய்திருக்கிறார்.

இதிலிருந்து, இந்தியாவை தென்னாடு, வடநாடு என்று பிரிக்கிற முயற்சியிலேயே ஒன்றிய ஆட்சி இறங்கியிருப்பதாகவே கருத வேண்டியிருக்கிறது. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் இவர்கள் தான் இந்த நாட்டின் பிரிவினை சக்திகள். இந்தியா இந்துக்கள் நாடு! இது இந்து மக்கள் அதிகம் வாழுகிற நாடு. என்று பேசிக் கொண்டிருக்கிற சங்பரிவாரங்கள் ஆங்கிலத்தை எதிர்க்கின்ற இந்துக்கள் தான் உண்மையான இந்துக்கள், ஆங்கிலத்தை ஆதரித்து, மாநில மொழியை ஆதரிப்பவர்கள் உண்மையான இந்துக்கள் அல்ல. என்று மொழியின் அடிப்படையில் மக்களை பிளவுபடுத்துகிறார்கள். ஏற்கனவே ஜாதியின் அடிப்படையில் இந்துக்கள் பிளவுபட்டு அது முரண்பாடுகளாக வெடித்துக் கொண்டிருக்கிறது.

ஜாதி அடிப்படையிலான பிளவு; மொழி அடிப்படையிலான பிளவு; இப்போது மாநிலங்களுக்கு இடையே காட்டப்படுகிற பாகுபாடுகளுக்கும் அடிப்படையான பிளவாக மாறி வருகிறது. இந்து என்ற ஒற்றைச் சொல்லால் மக்களை ஒற்றுமைப்படுத்த முடியாது, ஜாதியால், மொழியால், மாநில உரிமைப் பறிப்பால் பிரித்துக் கொண்டே போனார்கள். நாங்கள் இந்தியாவில் ஏன் சேர்ந்து வாழ வேண்டும் என்று மாநிலங்களின் கேள்வி கேட்கும் நிலைமைக்கு ஒன்றிய பாஜக இழுத்துச் சென்று கொண்டே இருக்கிறது.

பா.ஜ.க. ஆளும் மாநில ‘இந்து’க்கள் என்றால் அவர்களுக்கு தாராள உதவி; பா.ஜ.க. அல்லாத ஆட்சி நடக்கும் ‘இந்துக்கள்’ என்றால் புறக்கணிப்பு; இதுவே இந்து பார்ப்பனிய பண்பு!

# உரிகெல்லர் ‘ஆன்மீக’ சத்தியால் இரும்புப் பொருளை வளைத்தாரா?

**எட்வின் பிரபாகரன்**

‘நிமிர்வோம்’ மாத இதழில் 2020ஆம் ஆண்டில் வெளி வந்துள்ள கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் வெளியிடுகிறோம்.

**உச்ச நீதிமன்ற நீதிபதி இராம சுப்ரமணியம் போலி அறிவியல் வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு (3)**

**புதிர் 4:** உரி கெல் லெர் என்பவர் 23.11.1973 இல் பிபிசி தொலைக்காட்சியில், உலோகப் பொருள் களை பார்வையாலும், தொடுதலாலும் வளைத்துக் காட்டியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. ஹெரால்ட் புத்தோஃப், ரஸல் டர்க் ஆகிய ஆன்மீக உளவியல் ஆராய்ச்சியாளர்கள் உரி கெல்லெரை சோதித்துப் பார்த்து, அவரிடம் உள்ள அமானுஷ்ய சக்தியை ஒப்புக் கொண்டனர். இதை எந்த அறிவியல் வல்லுனராலும் விளக்க முடியவில்லை.

**விடை:** மார்க்ஸ் டேவிட் என்ற உளவிய லாளரிடம் இதற்கான பதில் உள்ளது. அவர் 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி யுள்ளார். அவற்றுள், “The Non-Psychic powers of Uri Gellar” என்ற நூல் புகழ்பெற்றது. 1977இல் எழுதப்பட்ட இந்த நூலில் உரி கெல்லரின் தில்லுமுல்லுகளை மார்க்ஸ் டேவிட் அம்பலப்படுத்தி யுள்ளார். ஹெரால்ட் புத்தோஃபும், ரஸல்டர்க்கும் செய்த ஆய்வே மோசடியான தாகும். உரி கெல்லரை ஆய்வுக்கு உட்படுத்திய அறையில் சில ஓட்டைகள் இருந்தன அதன் வழியே படங்களை பார்க்கும் வசதி உரி கெல்லருக்கு இருந்தது. மேலும், ஆய்வாளர்களுக்கும் கெல்லருக்கும் இடையே “இன்டர்காம்” எனப்படும் தொலைபேசி வசதியும் இருந்தது. இதனூடே, ஆய்வாளர்கள் பேசிக் கொள்வதை கெல்லரால் கேட்டிருக்க முடியும். எனவே, இந்த ஆய்வை நிராகரிக்கும் மார்க்ஸ் டேவிட், அறிவியல் ரீதியாக கட்டுப் படுத்தப்பட்ட நிலைமையில் செய்யப்படும் ஆய்வு தான் சரியான ஆய்வாக இருக்க முடியும் என்று நிறுவுகிறார். Brian Sapient என்பவர், “Rational Response Squad” (பகுத்தறிவு மறுமொழிக் குழு) என்ற யூடியூப் கணக்கில் பதிவேற்றிய காணொளி யில், உரி கெல்லெர் தன்னுடைய வித்தையை செய்ய முயன்று தோற்றுப் போன தருணங்களை சேர்த்திருந்தார். இதனை எதிர்த்து காப்புரிமை வழக்காடி உரி கெல்லெர் தோற்றுப் போனது குறிப்பிடத் தக்கது.

**புதிர் 5:** சோவியத் ரஷ்யாவில் மேடம் நீனா குலகினா என்பவர் இருந்தார். அவர் பார்வையாலேயே பொருள்களை நகர்த்தும் திறன் பெற்றிருந்தார். நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் உட்பட பலரும் அவரை சோதித்தனர். யாராலும் அவருடைய சக்தியை மறுக்க முடியவில்லை

**விடை:** 1983 இல் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழக அச்சகம் வெளியிட்ட “Science: Good, Bad and Bogus ” என்ற நூலில் இந்த சித்து விளையாட்டுகளைப் பற்றிய தகவல்கள் உள்ளன. சோவியத் விஞ்ஞானிகளிடம், ஒரு முறைக்கு மேல், ஏமாற்றும் போது மேடம் நீனா குலகினா சிக்கி யுள்ளார். 1991 இல் சோவியத் ரஷ்யா உடைந்த பின், 2002ஆம் ஆண்டு, லெவி ஜோயல் என்ற ஆய்வாளர் எழுதிய, “K.I.S.S. Guide to the Unexplained” என்ற நூலில், மேடம் நீனா குலகினா, பொருள் களை அசைக்க கண்ணுக்கு புலப் படாத நூலை பயன்படுத்திய தகவலும், காந்தங்களை மறைத்து வைத்து பயன்படுத்திய தகவல் களும் உள்ளன. எனவே, மேடம் நீனா குலகினா செய்வதை ஒரு மாயா ஜால ஏமாற்று வேலை என்று தான் கருத முடியும்.

(கட்டுரையாளர் கழக செயல்பாட்டாளர்)

(தொடரும்)

## வினா – விடை

- சென்னையில் ராமர்கோயில் இருக்கும் அயோத்தி மண்டபத்தை பூட்டு போட்டு பா.ஜ.க.வினர் அதிகாரிகளைத் தடுத்து போராட்டம். **– செய்தி**

  ரொம்ப நல்ல சேதி; அப்படியே அயோத்திக்குப் போய் அந்த ராமன் கோயிலுக்கும் பூட்டு போடுங்க; நல்ல சேவை.

- பெண் பத்திரிகையாளர்களை இழிவுபடுத்திய எஸ்.வி. சேகர், நீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டார். **– செய்தி**

  அது என்ன நிபந்தனையற்ற மன்னிப்பு? அதாவது, ஸ்டாலின் முதல்வராக வரவே முடியாது என்று அவரது ஜாதகத்தில் இருக்குன்னு திமிரில் பேசினார் அல்லவா? அப்படி ஜாதகத்தை நம்பியதற்கும் சேர்த்து கேட்பதுதான் நிபந்தனையற்ற மன்னிப்பு; இப்ப புரியுதா?

- உ.பி. சிறையில் கைதிகளுக்கு காயத்ரி மந்திரம் ஓத பா.ஜ.க. அரசு திட்டம். **–செய்தி**

  ஆர்.எஸ்.எஸ்.க்கு ‘தேச பக்தர்’களை பிடிக்க இப்படி ஒரு ‘ரூட்’ இருக்கா?

- குஜராத் பள்ளிகளில் ‘பகவத் கீதை’ கட்டாயப் பாடம். **– செய்தி**

  ‘பாஸ் மார்க்’ வாங்காவிட்டால், தேச விரோதி என்று கூறி பள்ளியிலிருந்து ‘டிஸ்மிஸ்’ என்று, ஒரு உத்தரவையும் சேர்த்துப் போடுங்க.

- ‘ராம நவமி’ நாட்களில் டெல்லி ஜெ.என்.யூ. மாணவர் விடுதியில் அசைவ உணவுக்குத் தடை. **– செய்தி**

  ராமனே ‘பீஃப் பிரியர்’ என்று வால்மீகி இராமாயணமே கூறுகிறதே; ஏனப்பா, இராமனை இழிவுபடுத்துறீங்க...

- ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியை தொடர்பு மொழியாக்க வேண்டும். **– அமித்ஷா**

  “இந்தி வேண்டாம் போடா” ஸ்டிக்கர்களைக் கோடிக்கணக்கில அச்சடிக்க தமிழ்நாட்டில் ஸ்டிக்கர் கம்பெனிகள் தயாராகி வருகின்றன. நல்ல தொழில் வாய்ப்பை உருவாக்கிய அமித்ஷாவுக்கு நன்றி.

## மாநில உரிமைகளைப் பறிக்காதே! கல்வி உரிமைகளைத் தடுக்காதே! மத வெறியைத் திணிக்காதே!

# நமக்கான அடையாளம் ‘திராவிட மாடல்’

- இடஒதுக்கீடு, சமூக நலனுக்கான திட்டங்கள், மாநில சுயாட்சி, இந்தித் திணிப்பு எதிர்ப்பு, பெண்களை அதிகாரப்படுத்தல், மதவெறி யற்ற - மக்களின் ஒற்றுமை, மூட நம்பிக்கையற்ற அறிவியல் சமுதாயம் - இவை திராவிடர் இயக்கம் தமிழ்நாட்டுக்குத் தந்த அடையாளங்கள். அனைத்துப் பிரிவு மக்களின் வளர்ச்சியை உள்ளடக்கிய திட்டங்களை உருவாக்குவது என்பதே நமது தமிழ்நாட்டின் தனித்துவம்.
- இந்த அடையாளங்கள், இப்போது ஒன்றிய ஆட்சியால் அழிக்கப்படுகின்றன; படிப் படியாக மறுக்கப்படுகின்றன; இதை எதிர்த்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப் போராட்டங்களை நடத்திக் கொண்டு வருகிறார். திட்டங்களை வகுத்து செயல் படுத்துகிறார். அதில் வெற்றி களையும் குவித்து வருகிறார்.
- தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டு எடுப்பது ஒரு பக்கம், மற்றொரு பக்கம் வலிமையான தமிழகத்தை கட்டமைப்பதற்கான திட்டங் களை உருவாக்குவது என்று, முதலமைச்சர் ஒரு கையில் வாளும், மற்றொரு கையில் கேடயமும் ஏந்தி நிற்கிறார். இதுதான் நாம் கூறும் “திராவிட மாடல்”.

**என்ன நடக்கிறது ?**

- பெட்ரோல் டீசல் விலை விண்ணை முட்ட உயர்ந்து கொண்டே இருக்கிறது; இடையில் தேர்தல் வந்தால் வாக்குக் கிடைக்காதே என்று தற்காலிகமாக விலை ஏற்றத்தை நிறுத்தி மக்களை ஏமாற்றுகிறார்கள். தேர்தல் முடிந்தவுடன் விலையேற்றம் தொடங்கி விடுகிறது. சர்வதேச எண்ணெய் நிறுவனங்கள் விலை உயர்த்துவதைவிட, பாஜக ஆட்சி மக்களிடமிருந்து பிழிந்து எடுக்கும் கலால் வரி தான் மிகவும் அதிகம். 2014-இல் பெட்ரோல் டீசலுக்கு கலால் வரி, அதாவது மத்திய அரசு போடும் வரி மூலம் ஒன்றிய அரசுக்குக் கிடைத்த வருவாய், ஒரு லட்சத்து 72 ஆயிரத்து 65 கோடி; அதே நேரத்தில் அம்பானி அதானி, ஜிண்டால், மார்வாடி பன்னாட்டு தொழிலதிபர்களுக்கு கோடி கோடியாக சலுகைகள் வாரி வழங்கப் படுகின்றன. (கார்ப்ரேட் வரி 30% விருந்து 25% குறைக்கப்பட்டது)
- உங்களுக்குத் தெரியுமா? கொரானா கோரத் தாண்டவமாடிய 2021ஆம் ஆண்டில் மட்டும் குஜராத்தி பெருமுதலாளி அதானி கூடுதலாக சேர்த்த சொத்து மதிப்பு ரூ.1.18லட்சம் கோடி. 2016இல் இதே குஜராத்தி அதானிக்கு ஸ்டேட் வங்கி கடனாக மக்கள் பணத்திலிருந்து வாரிக் கொடுத்தது எவ்வளவு தெரியுமா? 72 ஆயிரம் கோடி ரூபாய். இந்தக் கடன்காரர்தான் உலகப் பணக்காரர்கள் வரிசையில் 10 இடத்துக்குள் நிற்கிறார். பணக்கார பனியா ‘இந்து’களுக்குக் கொடுக் கிறார்கள்; ஏழை-எளிய இந்துக்களின் எரிவாயு மான்யத்துக்குக் கூட ‘பட்டை நாமம்’!
- அதானி, அம்பாணி, ஸ்டெர்லைட் வேதாந்தா போன்ற நிறுவனங்கள் வாங்கிய கடனில் 2018 தள்ளுபடியான தொகை ரூ.6.8 லட்சம் கோடியைத் தொட்டுள்ளது. பா.ஜ.க. ஆட்சியில் தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களில் 80 சதவீதம் கார்ப்பரேட் நிறுவனங்களின் கடன்கள்.
- மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது என் பிணத்தின் மீதுதான் ஜிஎஸ்டி வரி வரும் என்று கூறினார்; அவரே பிரதமராக வந்த போது மாநில அரசுகளின் வரி விதிப்பு உரிமையைப் பறித்து ஜிஎஸ்டி-யைக் கொண்டு வந்தார். மாநிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை தருவோம் என்று உறுதி அளித்தார். ஆனால் சொன்னபடி எதுவும் நடக்கவில்லை. தமிழ்நாட்டுக்கு ஜிஎஸ்டி மூலம் கிடைக்க வேண்டிய நிலுவை, ரூ16,725 கோடி.
- 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு இரயில் கட்டண சலுகை திடீரென ரத்து செய்யப்பட்டது. அரசு நிறுவனங்களான ஏர் இந்தியாவை அடிமாட்டு விலைக்கு விற்றார்கள். கோடிக்கணக்கில் அரசக்கு இலாபம் ஈட்டித் தந்த எல்.அய்.சி பங்கு களையும் விற்பனை செய்யத் துவங்கி விட்டார்கள்.

**கொரோனா காலத்தில் என்ன நடந்தது ?**

- மக்கள் பசி பட்டினியால் துடித்தார்கள், தவித்தார்கள், சொந்த ஊருக்கு வெளி மாநிலங்களுக்குப் பயணம் போகக் கையில் காசில்லை. ஆனால் இரயிலுக்கு சிறப்புக் கட்டணம் விதித்தது ஒன்றிய ஆட்சி. தடுப்பூசி போடுவதற்கும் கட்டணம் கட்ட வேண்டும் என்று கேட்டார்கள். தமிழ்நாட்டுக்குத் தேவையான தடுப்பூசி வழங்குவதிலும் பாகுபாடு காட்டினார்கள். நீதிமன்றத்தின் தலையீட்டுக்குப் பிறகு தான் இவைகள் நீக்கப்பட்டன.

**இந்த ஏழை எளிய மக்கள் யார் ?**

- இவர்களும் இந்துக்களாக பிறந்தவர்கள் தானே பா.ஜ.க. பார்வையில்; இந்து மக்கள் உரிமைக்காக நாங்கள் கட்சி நடத்துகிறோம், இது இந்துக்களின் நாடு என்று மார் தட்டுகிறவர்கள், ஏழை எளிய இந்துக்களைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களை வாட்டி வதைத்துக் கொண்டு, அம்பானி, அதானி போன்ற பெரும் முதலாளி இந்துக்களை கொழுக்க வைப்பதுதான் இவர்களுடைய இந்து இராஜ்ஜியத்தின் கொள்கை.
- இடஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்த்து வந்த பார்ப்பனர்களுக்கு அவர்கள் கேட்காமலே 10 சதவீத ஒதுக்கீடு அளித்து சட்டத்தைத் திருத்தினார்கள். உழைக்கும் மக்களின் உணவான மாட்டிறைச்சித் தடை; சாப்பிட்டால் அடித்துக் கொலை; பசுவை தெய்வமாக வணங்கு; வேதத்தைப் பரப்பு; சமஸ்கிருதமே நமது பண்பாட்டு மொழி; பல்லாயிரம் கோடியில் ராமனுக்குக் கோயில்; அதே நேரத்தில் உழைக்கும் ஏழை எளிய இந்து மக்களை வாட்டி வதைப்பது; சுரண்டும் பார்ப்பன பெரு முதலாளி இந்துக்களைக் கொழுக்க வைப்பபது; இதுதான் இவர்கள் பேசும் ‘இந்து’ உரிமை; இவர்கள் பேசும் ‘இந்து’க்கள் ஆட்சி.
- டெல்லி குடியரசு தின அணிவகுப்பில் தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்ட வீரர்களான வ.உ.சி, குயிலி, வேலு நாச்சியார் ஆகியோர் படங்களை அனுமதிக்காமல் தமிழர்களை அவமதித்தது யார்? ஒன்றிய ஆட்சி தானே. ஆனால் இராமன், அனுமான், வேத பாட சாலை,வேதம் கற்பிக்கும் பண்டிதர்கள் இவர்கள்தான் இந்தியாவின் தேசிய விடுதலை வீரர்களாக அணிவகுப்பில் சித்தரிக்கப் பட்டார்கள். செக்கிழுத்த வ.உ.சி.யைவிட இராமனும், அனுமானும் இவர்கள் பார்வையில் தேச பக்தர்களாம்.
- தமிழ்நாட்டுக் கல்விக் கொள்கையை சிதைத்து, தேசிய கல்விக் கொள்கையைத் திணித்து மாநிலத்தின் கல்வியை நாங்களே தீர்மானிப்போம் என்று அடம் பிடிக் கிறார்கள்.
- 5, 8,10, 12ஆம் வகுப்புகளுக்கு அரசுப் பொது தேர்வாம் ! எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் படிப்பை விட்டு விட்டு, தொழில் பயிற்சி எடுக்கலாமாம்! குலத் தொழிலுக்குப் போ என்கிறார்கள். புரிகிறதா? இதுதான் இராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டம்.
- நீட் தமிழகத்தில் சமூக நீதிக்கு எதிரானது என்று இரண்டு முறை சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியும், அதை ஆளுநர் மாளிகையில் குப்பைத் தொட்டியில் போட்டு வைத்திருக்கிறார். சட்டமன்ற உரிமைகளை விட மாநில ஆளுநர்களின் மாளிகைகள் தான் அதிகாரம் மிக்கதா? இது நியாயம் தானா? இப்போது மத்திய பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பில் சேருவதற்கும் நுழைவுத் தேர்வு வந்து விட்டது. (Cute தேர்வு) தமிழ்நாடு சட்ட மன்றம் எதிர்த்து தீர்மானம் போட்டிருக் கிறது.
- சமஸ்கிருதத்திற்கு ஏனைய தேசிய மொழிகளை விட ஏழு மடங்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு. சமஸ்கிருதம் பேசும் ஏதாவது ஒரு மாநிலமாவது இருக்கிறதா?
- “இந்தியே தொடர்பு மொழி; ஆங்கிலம் வேண்டாம்” என்று இப்போது அமித்ஷா கூறுகிறார். ஒன்றிய ஆட்சியின் 70 சதவீதப் பணிகள் ஆங்கிலத்தில் இருந்து இந்திக்கு மாற்றி விட்டோம் என்கிறார். உள்துறை அமைச்சகத்தில் 100% நிர்வாகம் இந்தியில் மட்டுமே நடக்கிறது என்று கூறுகிறார். இந்தியா இந்தி நாடா? அனைத்து மொழி களையும் பேசும் இன மக்கள் வாழுகின்ற நாடா ? நாம் சிந்திக்க வேண்டாமா?
- ஒவ்வொருத் துறையிலும் நாம் போராட வேண்டியிருக்கிறது. தமிழக அரசுப் முதல்வரும் புதிய புதிய திட்டங்களை அறிவிக்கிறார்கள். தொழில் வளர்ச்சி, நவீன தொழில் நுட்ப வளர்ச்சி, மக்களுக்கான மருத்துவம், மக்களைத் தேடிச் செல்லும் கல்வி, பெண்களுக்கு பேருந்தில் இலவசப் பயணம், கல்லூரி படிப்பு வரை மாணவி களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், தமிழ் தெரிந்தவர்களுக்குத் தான் தமிழ்நாட்டில் வேலை என்று ‘திராவிட மாடல்’ வளர்ச்சி யடைந்து கொண்டே வருகிறது. பிற மாநிலங்களுக்கும் இதுவே வழிகாட்டும் ‘மாடல்’ என்பதை வரலாறு உணர்த்தப் போகிறது.
- இளைஞர்களே வாருங்கள்! திராவிடன் மாடல் நமக்கான அடையாளம்! மதவாதத்தை வீழ்த்த, மாநில உரிமைகளை மீட்க, தமிழ்நாட்டை பொற்காலம் நோக்கி அழைத்துச் செல்ல அனைத்துப் பிரிவினரும் உள்ளடக்கிய சமூக நீதியை உறுதி செய்வோம். அதுவே அடையாளம்; நமக்கான சுயமரியாதை; நமக்கான வளர்ச்சி; நமக்கான பெருமை.

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

**(குறிப்பு: மண்டல மாநாடு பரப்புரைப் பயணத்துக்கான துண்டறிக்கை)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘திராவிட மாடல்’ பரப்புரைப் பயணத்துக்குத் தோழர்கள் தயாராகிறார்கள்

***நமக்கான அடையாளம் ‘திராவிட மாடல்’ மண்டல மாநாடு ஒட்டி மாவட்ட கழகங்களின் கலந்துரையாடல்களை நடத்தி தோழர்கள் பயணத்துக்கு திட்டமிட்டு வருகிறார்கள்.***

**சென்னை :** *கடந்த ஏப்ரல் 02, 03 ஆகிய நாட்களில், ஈரோட்டில் நடைபெற்ற தலைமைக்குழு, செயலவையில், மண்டலம் வாரியாக மாநாடு நடத்துவது என்றும், மாநாட்டிற்கு முன்னதாக 15 தெருமுனைக் கூட்டங்கள் மாவட்டம் வாரியாக நடத்த வேண்டும் என்றும், முடிவுகள் எடுக்கப்பட்டன.*

*செயலவை முடிவுகளின் படி, சென்னை மாவட்டம் சார்பாக மாநாடு மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது பற்றி சென்னை மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்துரையாடல், 05.04.2022 செவ்வாய் கிழமை மாலை 6 மணிக்கு, சென்னை இராயப்பேட்டை வி.எம் தெரு பெரியார் படிப்பகத்தில், மாவட்ட செயலாளர் உமாபதி தலைமையில் நடைபெற்றது.*

*கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் வேழவேந்தன் ஆகியோர் உட்பட மாவட்ட, பகுதி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.*

**சேலம் – தருமபுரி – கிருட்டிணகிரி :** *கூட்டம் 09.04.2022 சனி காலை 11.00 மணிக்கு சேலம் கருப்பூர் சக்திவேல் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.*

*சேலம் - தருமபுரி - கிருட்டிணகிரி மாவட்ட மண்டல மாநாடு குறித்து விவாதிக்கப்பட்டு 01.05.2022 ஞாயிறு சேலம் ஏற்காட்டில் துவக்க விழா நிகழ்ச்சி தொடங்குவதெனவும் அதனைத் தொடர்ந்து 04.05.2022 முதல் 06.05.2022 வரை சேலம், தருமபுரி, கிருட்டிணகிரி மாவட்டங்களில் 20க்கும் மேற்பட்ட பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தி கிருட்டிணகிரி மாவட்டத்தில் நிறைவு விழா நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.*

*பிரச்சாரப் பயணத்தில் பறை முழக்கம், இசை நிகழ்ச்சி, வீதி நாடகம் ஆகியவை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.*

*கூட்டத்தில் 28 தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர்களுக்கு மதிய உணவு கருப்பூர் சக்திவேல் இல்லத்தில் ஏற்பாடு செய்திருந்தார். கலந்துரையாடல் கூட்டம் மதியம் 1.30 மணியளவில் முடிவடைந்தது.*

**கோவை – திருப்பூர் – திண்டுக்கல் :** *மாநில உரிமையைக் கல்வி உரிமையைப் பறிக்காத; மதவெறியை திணிக்காதே; நமக்கான அடையாளம் திராவிட மாடல் தெருமுனைக் கூட்டங்கள் மண்டல மாநாடு நடத்துவது பற்றிய கோவை மாநகர கலந்துரையாடல் கூட்டம் 10.04.22 ஞாயிறு கோவை நிர்மல் மதி இல்லத்தில் நடைபெற்றது.*

*இக்கலந்துரையாடலில் மாநகர தோழர்கள் இராமச்சந்திரன், பன்னீர் செல்வம், வெங்கட், மாதவன் சங்கர், நிர்மல், நேருதாசு, கிருஷ்ணன், இராஜாமணி, புரட்சித் தமிழன், சக்கரவர்த்தி, சிவராஜ் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.*

*இக்கலந்துரையாடலில் சுவர் எழுத்து விளம்பர பொறுப்பாளராக கிருஷ்ணன், மேடை ஒலிபெருக்கி அமைக்கும் பொறுப்பை நேருதாசு வரவு செலவு கணக்கு பொறுப்பு சூலூர் பன்னீர்செல்வம் மாநாட்டுக்கான போட்டோ வீடியோ பொறுப்பு தோழர்கள் டிட்டோ சிவராஜ், ஆனைமலை கணேஷ், கிருஷ்ணன்,திருப்பூர் தனகோபால் பார்த்துக்கொள்வார்கள் என முடிவு செய்யப் பட்டது.*

*மேலும், சி.டி. வடிவில் ஸ்டிக்கர் தயார் செய்து இரு சக்கர வாகனத்தில் ஒட்டிக்கொண்டு விளம்பரப்படுத்துதல்; மேட்டுப்பாளையத்தில், கோவை மாநகரில் சுவர் விளம்பரம் செய்வது; தெருமுனைக் கூட்டங்களில் தோழர்கள் புரட்சித் தமிழன், கிருஷ்ணன், அமிலா பாடல் பாடுவது;*

*மாநாட்டில் கலை நிகழ்ச்சிகள் அல்லது மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரை அழைப்பது மற்றும் தெருமுனை கூட்டங்கள் மாநாடு நடத்துவதற்கான காவல்துறைக்கு அனுமதி கடிதம் தருவது;*

*தனிநபர் வசூலுக்கு குழுவாக செல்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற புரட்சித் தமிழன் 10 ஆயிரம் ரூபாய்; இராஜாமணி பிளக்ஸ் அடிக்கும் செலவிற்காக 2000 ரூபாய் ; மாநாடு, தெருமுனைக் கூட்டங்களில் பயன்படுத்த விளம்பர டிசைன்களை அமிலாசெய்து தருகிறார்; இசைமதி பாடல் பாடுவது மற்றும் விளம்பரத்திற்கு குரல் வடிவில் பேசி இணைய தளங்களில் விளம்பரம் செய்வதற்கு ஒப்புக்கொண்டுள்ளார்.*

*எந்தெந்த இடங்களில் தெருமுனை கூட்டங்கள் நடத்துவது என பட்டியல் தயார் செய்யப்பட்டது.*

*தனிநபர்களுக்கும் முன்கூட்டியே பட்டியல் தயாரித்து வைத்து அவர்களை சந்திப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.*

*இந்த கலந்துரையாடலின் இறுதியில் கோவை மாவட்ட தலைவர் இராமச்சந்திரன் மற்றும் கிருஷ்ணன் பிறந்தநாள் பாடல் மற்றும் கடவுள் மறுப்பு கூறி கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.*

**மயிலாடுதுறை மாவட்டம் :** *7.4.2022 மாலை மாவட்ட தலைவர் மகாலிங்கம் தலைமையில் மயிலாடுதுறை மாவட்ட கலந்துரையாடல் நடைபெற்றது. மாவட்ட நகர கழக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். நமக்கான அடையாளம் ‘திராவிட மாடல்’ என்கிற பிரச்சாரக் கூட்டங்களை மயிலாடுதுறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஆறு நாட்கள் 15 கூட்டங்கள் நடத்தி முடிப்பது எனவும் நிறைவு நிகழ்வாக மண்டல மாநாட்டை 4.5.2022 அன்று மயிலாடுதுறையில் சிறப்பாக நடத்துவது எனவும், கடலூர் நாகை மாவட்ட தோழர்களின் மூலம் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி அவர்களை மாநாட்டில் பங்கேற்கச் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.*

*நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துவதற்கான ஆலோசனைகளை தோழர்கள் முன்வைத்தனர்.*

# டெல்லிக்கு காவடி எடுத்தது யார்?

*தமிழகத்தில் நீண்ட நாட்களுக்குப் பிறகு சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட கூடியவர்கள் இரண்டு சதவீதத்திற்கும் குறைவுதான், என்று அமைச்சர் நேரு விளக்கம் அளித்திருக்கிறார். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு தமிழகத்தில் சொத்து வரி எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதையும் அரசு விளக்கி இருக்கிறது. இதை எதிர்த்து பாஜக போராடப் போகிறதாம், அண்ணாமலை கூறியிருக்கிறார். ஒவ்வொரு நாளும் டீசல் விலையையும், பெட்ரோல் விலையையும் உயர்த்திக்கொண்டே போகின்றவர்கள், சமையல் எரிவாயு விலையை உயர்த்திக்கொண்டே போகிறவர்கள் இப்போது இரண்டு சதவீதம் பேர் கூட பாதிக்கப்படாத சொத்துவரி உயர்விற்கு களமிறங்கப் போவதை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.*

*எடப்பாடி பழனிச்சாமியும் சொத்து வரியை எதிர்த்து போர்க் குரல் கொடுக்கிறார். அவரும் சொத்து வரியை 300 மடங்கு உயர்த்தி வெளியிட்டவர் தான். பிறகு தேர்தலில் வாக்குகள் கிடைக்காமல் போய்விடும் என்பதற்காக அந்த ஆணையை நிறுத்தி வைத்தவர் தான். எதையும் தமிழ்நாட்டு மக்கள் மறந்துவிட வில்லை. முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணத்தை ஏதோ பணம் போடுகின்ற பயணமாக, குடும்ப சுற்றுலா போவதாக கொச்சை படுத்தினார், அவையெல்லாம் எவ்வளவு பெரிய அப்பட்டமான பொய் என்பது அம்பலமாயின.*

*இப்போது முதலமைச்சர் டெல்லிக்குப் போய் அங்கே அண்ணா அறிவாலயம் திறப்பு விழாவில் பங்கேற்று, ஒன்றிய அமைச்சர்களை சந்தித்து தமிழ்நாட்டிற்கான பல்வேறு உரிமை கோரிக்கைகளை கொடுத்துள்ளார். “நாங்கள் போனபோது காவடி தூக்கிக்கொண்டு போனோம்” என்று சொன்ன மு.க.ஸ்டாலின், ’அவர் மட்டும் இப்போது என்ன காவடி தூக்கிக் கொண்டு போனார்’ என்று கேட்கிறார் எடப்பாடி பழனிசாமி. பழனிச்சாமி தூக்கிக்கொண்டு போனது உண்மையிலேயே அடிமைக் காவடி. பழனிச்சாமி மொழியிலேயே கூற வேண்டுமானால், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டெல்லிக்கு எடுத்த சென்ற காவடி உண்மையிலேயே போர்க் காவடி, உரிமைக் காவடி. தமிழ்நாட்டுத் திட்டங்கள், தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் இவைகளைத்தான் அங்கு மனுவாக கொடுத்து திரும்பியிருக்கிறார். தமிழ்நாடு துணை முதலமைச்சராக இருந்த ஓபன்னீர்செல்வத்திற்கு என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். நிர்மலா சீதாராமன் அமைச்சரக வாயிலில் பல மணி நேரம் காத்திருந்து அவரை சந்திக்கக் கூட அனுமதிக்காமல் அவமானப் படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டார் பன்னீர்செல்வம். அதைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி பேசவில்லை.*

*எடப்பாடி பழனிச்சாமி, டெல்லியிடமிருந்து தமிழ்நாட்டின் உரிமைகளைப் பெற்றுத் தந்தோம் என்று கூறுகிறார். ’நீட்’ ற்கு எதிராக தீர்மானத்தை சட்ட சபையில் கொண்டு வந்ததோடு சரி வேறு எந்த முயற்சியும் முன்னெடுக்கப்பட வில்லை. திமுக ஆட்சிக்கு வந்த பிறகுதான் அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டது, குழு அறிக்கை வழங்கியது, அறிக்கையின் அடிப்படையில் மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்றியது, அதை ஆளுநருக்கு அனுப்பியது. ஆளுநர் அதைத் திருப்பி அனுப்பினார், மீண்டும் சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து, அதை மீண்டும் ஆளுநருக்கு அனுப்பப்பட்டது, அதையும் ஆளுநர் இன்னும் கிடப்பில் போட்டு வைத்துள்ளார். இப்போது திமுக உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் ஆளுநரை வெளியேற்ற வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் போர்க்கொடி ஏந்தி போராடிக்கொண்டு இருக்கிறார்கள்.*

*தமிழ்நாட்டிற்காக எடப்பாடி பழனிசாமி இதில் ஏதாவது ஒன்றை செய்ததுண்டா ? 7 பேர் விடுதலையில் கையெழுத்து போட்டு விட்டு கையைக் கட்டி உட்கார்ந்து கொண்டார் எடப்பாடி பழனிசாமி. திமுக தற்போது உச்ச நீதிமன்றத்தில் மிகச்சிறந்த வழக்கறிஞர்களை வைத்து வாதாடி ஏழு பேருக்கும் விடுதலை கிடைக்கும் முயற்சியை எடுத்துள்ளது. இவற்றில் ஏதாவது ஒன்றில் எடப்பாடி ஆட்சி ஈடுபட்டது உண்டா ? மத்திய ஆட்சிக்கு அடிமை சேவகம் புரிந்தவர்கள் தூக்கிய அடிமை காவடிக்கும்; தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காக போர்க்கொடி தூக்கி நிற்கின்ற போர்க்காவடிக்கும் வித்தியாசம் உண்டு. சிதறிக் கொண்டிருக்கும் அஇஅதிமுக கட்சியை ஒற்றுமை படுத்த வேண்டும் என்று பேசிக் கொண்டு இருக்கிறார் பழனிச்சாமி. ஆனால் தமிழக முதலமைச்சர் டெல்லியில் பாஜகவிற்கு எதிராக பாஜக அல்லாத கட்சிகளின் ஒற்றுமைக்கு முன் முயற்சி எடுத்து வருகிறார். அவர் எவ்வளவு உயரத்தில் இருக்கிறார். அதிமுக எவ்வளவு பள்ளத்தில் கிடக்கிறது என்பதை இந்த ஒன்றை வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th April 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN